ஸ்ரீ:

# திருமாலை ஸங்கதி.

முதற்பாட்டில்—திருநாம ஸங்கீர்த்தநத்தாலே யமன் முதலானோர் தலையிலே காலை வைத்துக் கூத்தாடும்படியான பெருமை பெற்றேனென்றார்.

௨.—திருநாம ஸங்கீர்த்தநத்திலுள்ள இனிமையாலே பரமபதமும் வேண்டாவென்றார்.

௩.—அத்தோடு விரோதிக்கும் ஸம்ஸாரமும் வேண்டாவென்றார்.

௪.—கொடிய பாவிகளுக்கும் திருநாமஞ்சொல்ல அதிகாரமுண்டாயிருக்க இழப்பதே! என்று வயிறெரிந்தார்.

௫.—அல்பமாயும் அநித்யமாயுமுள்ள ப்ராக்ருதவிஷயங்களைப் பற்றுவார் சீலமில்லாச் சிறியோர் என்றார்.

௬.—போக்தாவின் நிலையில்லாமையைச் சொன்னார்.

௭.—முமுக்ஷுக்களாக ப்ரமித்திருக்கிற பாஹ்யமதஸ்தரைக் குறித்து ஆச்ரயிக்கத்தக்க தைவத்தை உபதேசித்தார்.

௮.—எம்பெருமானுடைய வைபவத்தைப் பொறாதவர்கள் கொல்லத்தக்கவர் என்றார்.

௯.—இசைந்தவர்களை நோக்கி "நீங்கள் ஸர்வஸுலபனான கண்ணபிரானைப் பணிமின்" என்றார்.

௧௦.—விபவாவதாரங்களுக்குப் பிற்பட்டவர்கட்கும் உதவும்படி திருவரங்கம் பெரிய கோயிலிலே வந்து கிடந்தானென்றார்.

௧௧.—திருவரங்கமென்னப் பெறாதவர்கள் கர்ப்ப நிர்ப்பாக்யர் என்றார்.

௧௨.—தாம்பெற்றதும் பிறர்படும் அனர்த்தத்தைப் பொறுக்கமாட்டேன் என்றார்.

௧௩.—எல்லாரும் திருநாமத்தை அநுஸந்தித்து உஜ்ஜீவிக்கக் கூடுமோ? என்று மனோரதித்தார்.

௧௪.—பகவத் விரோதிகளோடு இதுவரை தமக்கிருந்த ஸம்பந்தத்தால் வந்த விடாய்தீர, திருநாமத்தை வாயாரப்பேசினார்.

௧௫.—ஸம்பந்த உணர்ச்சியைப் பிறப்பித்தவாற்றை அருளிச்செய்தார்.

௧௬.—விஷயத்துக்குத் தகுதியாக பக்திபெருகினபடியைப்பேசினார்.

௧௭.—தமது கண்கள் களித்தபடியைப் பேசினார்.

௧௮.—உட்களிப்புப் புறவெள்ளமிட்டபடியைச் சொன்னார்.

௧௯.—உடலுருகினபடி சொன்னார்.

௨௦.—எம்பெருமானோடுள்ள உறவறிந்தவர்கட்கு அகலவொண்ணாது என்றார்.

௨௧.—மநஸ்ஸால் பரிச்சேதிக்க வொண்ணாதென்றார்.

௨௨.—பாசுரமிட்டுப் பேசவொண்ணாதென்றார்.

௨௩.—மறக்கமுடியாதென்றார்.

௨௪.—பிறந்த பக்தி, விஷயத்துக்குத் தகுதியாக இல்லாமையாலே அது க்ருத்ரிமமென்றார்.

௨௫.—சாஸ்த்ரீயமான பக்தி முதலியவை ஒன்றுமில்லையென்றார்.

௨௬.—ஸ்த்ரீ சூத்ராதிகளுக்குள்ள நன்மையுமில்லையென்றார்.

௨௭.—திர்யக் ஜந்துக்களுக்குள்ள நன்மையுமில்லையென்றார்.

௨௮.—கஜேந்த்ராழ்வான் தான் இடர்ப்பட்டபோது நினைத்த நினைவுமில்லையென்றார்.

# திருமாலை ஸங்கதி.

௨௯.—விலக்ஷணை தேசவாஸமில்லையென்றார்.

௩௦.—இவை யிட்டாமை மாத்திரமேயன்றியே பிறர்க்கு அனர்த்தத்தை விளைப்பவனுமாயிராநின்றேனென்றார்.

௩௧.—நீசவிஷயமான ஸ்த்ரீகளாலும் நிராகரிக்கப்பட்டேனென்றார்.

௩௨.=இப்படி ஒருவர்க்குமாகாதவன் திருமுன்பே வந்துநின்றது மூர்க்கத்தனமென்றார்.

௩௩.=வெட்கங்கெட்டவன் நானென்றார்.

௩௪.=இப்படிப்பட்ட நான் உன்னைக்கிட்டி உனக்கு அவத்யத்தை விளைப்பேனல்லேன் என்றார்.

௩௫.=நீர்மையாலே சேர்த்துக்கொண்டானென்றார்.

௩௬.=விசேஷகடாக்ஷம் பண்ணவேணுமென்று கதறினார்.

௩௭.=அந்த விசேஷகடாக்ஷம் பெறாமல் அலைபாய்ந்தார்.

௩௮.=இப்படி என்னைப்போலே பதறுகின்ற தொண்டரை உகக்குமவன் நீ என்றார்.

௩௯.=அவர்கட்குப் பிறப்பின் தாழ்வால் ஒருகுறையுமில்லையென்றார்.

௪௦.=அவர்களுக்குப் பரஹிம்ஸை முதலிய கொடியகருமங்களின் பலன் அநுபவிக்க வேண்டா என்றார்.

௪௧.=அவர்கள் தங்களோடு ஸம்பந்தம் பெற்றவர்களையும் பரிசுத்தராக்குமவர் என்றார்.

௪௨.=அவர்கள் எம்பெருமானைப்போலே பூஜிக்கத்தக்கவர் என்றார்.

௪௩.=பிறப்பையும் குலத்தையுங்கொண்டு அவர்களை இழிவாக நினைக்குமவர்கள் சண்டாளரென்றார்.

௪௪.=பிரமன் முதலியோர்க்கும் அரிதான பேற்றை ஒரு திர்யக்ஜந்துவுக்கு அருள் செய்தமையைக் கூறினார்.

௪௫.=இத்திவ்ய ப்ரபந்தத்தில் எம்பெருமானுக்குள்ள போக்யதையை வெளியிட்டார்.

தொண்டரடிப்பொடியாழ்வார் திருவடிகளே சரணம்.